# சார்பு நீதிமன்றம், வாணியம்பாடி, திருப்பத்தூர் மாவட்டம்

**முன்னிலை :** B. ராஜா, பி.ஏ., பி.எல்.,
சார்பு நீதிபதி, வாணியம்பாடி.

2026ம் ஆண்டு பிப்ரவரி மாதம் 16 ம் நாள் திங்கட்க்கிழமை

(2055 திருவள்ளுவர் ஆண்டு,ஸ்ரீ விசுவாவசு வருடம் மாசி திங்கள் 04ம் நாள்) )

**இடைநிலை மனு எண்.01/2025**
**அசல் வழக்கு எண்.359/2022**

திருவேங்கடம்
த/பெ முனிசாமி .... மனுதாரர்/ வாதி

/ எதிர் /

1. மாயக்கண்ணன்
   த/பெ கோவிந்தராஜி
2. நளினி
   க/பெ கோவிந்தராஜி
3. வேலு
   த/பெ சின்னதம்பி
4. செல்வம்
   த/பெ சின்னதம்பி ... எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள்
5. சின்னதம்பி
   த/பெ கெஜ்ஜன்
6. சரஸ்வதி
   க/பெ சின்னதம்பி
7. கலைவாணி
   க/பெ கார்த்திகேயன்
8. பவித்ரா
   த/பெ கோவிந்தராஜி ... எதிர்மனுதாரர்கள்/கட்சி சேர்க்கப்பட வேண்டிய நபர்கள்

மனுவானது இறுதியாக, கடந்த 06.02.2026ம் தேதியன்று இந்நீதிமன்றத்தில் இறுதி விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டு, மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர் திரு. என். ரவி, அவர்கள் ஆஜராகியும், 1,2 எதிர்மனுதாரர்கள் தரப்பில் வழக்கறிஞர் திரு. வி.வி. சிவாஜி, அவர்கள் ஆஜராகியும், மற்ற எதிர்மனுதாரர்கள் அனைவரும் தோன்றாதரப்பினர்கள்

நிலையில் வைக்கப்பட்டும், இதுநாள் வரை இந்நீதிமன்ற பரிசீலனையில் இருந்து வந்த மனுக்கோப்பு ஆவணங்கள் அனைத்தையும் கவனமாக பரிசீலனை செய்து, இருதரப்பு வாதங்களையும் கேட்டறிந்து, இம்மனுவில் இன்று இந்நீதிமன்றம் வழங்கும் ....

<u>உத்தரவு</u>

01) அசல் வழக்கில், 5 முதல் 8 எதிர்மனுதாரர்களை தரப்பினர்களாக கட்சி சேர்க்க அனுமதி வேண்டுமென்ற பரிகாரத்திற்காக, உரிமையியல் விசாரணை நடைமுறை சட்டம் கட்டளை 1 விதி 10ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

<u>02) மனுவிற்கான பிரமாணப் பத்திரத்தின் சுருக்கம்:-</u>

மனுதாரர் அசல்வழக்கில் வாதி ஆவார். கடந்த 21.12.2019ம் தேதி மனுதாரரிடம், ரூ.3,00,000/-ம் கடன் பணத்தை கோவிந்தராஜி என்பவர் பெற்றுக்கொண்டு, அதற்கு ஆதரவாக மனுதாரர் பெயருக்கு கடனுறுதிச்சீட்டு ஒன்று எழுதிக்கொடுத்துள்ளதாகவும், மேற்படி பணத்தை திருப்பி செலுத்தாத நிலையில், அவர், கடந்த 2021ம் ஆண்டு இறந்துள்ள நிலையில், அதனை பின்வட்டியுடன் வசூலிப்பதற்காக மனுதாரர், 1 முதல் 4 எதிர்மனுதாரர்களுக்கு எதிராக அசல் வழக்கை தாக்கல் செய்துள்ளார்.

அசல் வழக்கினை எதிர்த்து வழக்காடியுள்ள 1,2 எதிர்மனுதாரர்கள் தரப்பில் இறந்துள்ள கோவிந்தராஜின் சட்டப்படியான வாரிசுகள் பற்றிய முழுமையான விவரங்களை எதிர்வழக்குரையில் குறிப்பிடவில்லை. அசல் வழக்கு மனுதாரர் தரப்பு வாய்மொழி சாட்சியம் முடிக்கப்பட்டு, எதிர்மனுதாரர்கள் தரப்பு வாய்மொழி சாட்சியத்திற்காக நிலுவையில் இருந்துள்ளபோது, 1ம் எதிர்மனுதாரர் தரப்பில் பி.சா.1 வாய்மொழி சாட்சியத்திற்கான முதல் விசாரணை பிரமாணப்பத்திரம் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

அதில், இறந்துள்ள கோவிந்தராஜின் சட்டப்படியான வாரிசுகள் பற்றிய முழுமையான விவரம் குறிப்பிடப்பட்டுள்ளது. மேற்படி நபர்கள் பற்றிய விவரம் மனுதாரருக்கு தற்போது தான் தெரியவந்துள்ளது. ஆகையால், இறந்துள்ள கோவிந்தராஜின் மற்ற வாரிசுகளான 5 முதல் 8 எதிர்மனுதாரர்களை அவசியமான தரப்பினர்களாக அசல் வழக்கில் கட்சி சேர்க்க அனுமதி வேண்டுமென மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**<u>03) 1ம் எதிர்மனுதாரரால் தாக்கல் செய்யப்பட்டு, 2ம் எதிர்மனுதாரரால் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ள எதிர்வழக்குரையின் சுருக்கம்:-</u>**

மனுச்சங்கதிகள் பொய்யானவை. தவறானவை. எதிர்மனுதாரர்கள் ஒப்புக்கொள்ளும் மனுச்சங்கதிகளை தவிர, மற்றவற்றை மனுதாரர் நிரூபிக்க கடமைப்பட்டுள்ளார்.

மனுவிற்கான பிரமாணப்பத்திரத்தில் மனுப்பரிகாரங்களுக்காக மனுதாரர் கூறியுள்ள காரணங்கள் அனைத்தும் சட்டப்படி ஏற்புடையவை கிடையாது. அசல்வழக்கில் மனுதாரரால் கூறப்பட்டுள்ள தாவா கடனுறுதிச்சீட்டு மோசடியானதாகும்.

மனுதாரருக்கு இறந்துள்ள கோவிந்தராஜின் உண்மையான வாரிசுகள் பற்றிய விவரங்கள் நன்றாக தெரிந்திருந்தும், வேண்டுமென்றே அவர்களை வழக்கில் கட்சி சேர்க்க தவறியுள்ளார். தற்போது, மனுதாரர் தாக்கல் செய்துள்ள இம்மனு பரிகாரம் காலதோசத்தால் பாதிக்கப்பட்டுள்ளது. அசல் வழக்கினை இழுத்தடிப்பு செய்யும் நோக்கில் மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. ஆகையால், பொய்யான சங்கதிகளுடன் மனுதாரர் தாக்கல் செய்துள்ள மனுவினை தள்ளுபடி செய்து உத்தரவிடவேண்டும்.

**04)** இம்மனுவை பொறுத்த வரையில் மனுதாரருக்கு மனுப்பரிகாரம் கிடைக்கக்கூடியதா ? இல்லையா ? என்பது இந்நீதிமன்றத்தால் முடிவு காண வேண்டிய தீர்வுக்குரிய பிரச்சனை ஆகும்.

**05)    பிரச்சனைக்குரிய தீர்வு**

மனுதொடர்பான இந்நீதிமன்ற விசாரணையில், இருதரப்பிலும் எந்தவொரு வாய்மொழி சாட்சியமும், ஆவணச் சான்றுகளும் இந்நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தப்படவில்லை. இருதரப்பு கற்றறிந்த வழக்கறிஞர்களின் வாதங்களை கேட்டு, வழக்கு கோப்பு ஆவணங்கள் அனைத்தையும் இந்நீதிமன்றம் கவனமாகப் பரிசீலனை செய்துள்ளது. மனுதாரர் தரப்பில் ஆஜராகியுள்ள கற்றறிந்த வழக்கறிஞரால் தாக்கல் செய்யப்பட்டுள்ள எழுத்துமூலமான வாதுரை இந்நீதிமன்ற பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டுள்ளது.

கடந்த 21.12.2019ம் தேதி மனுதாரரிடம் கோவிந்தராஜி என்பவர் ரூ.3,00,000/-ம் கடன் பணம் பெற்றுக்கொண்டு, அதனை ஆண்டுவட்டி 12% த்துடன் திருப்பி கொடுப்பதாக ஒப்புக்கொண்டு, மனுதாரர் பெயருக்கு கடனுறுதிச்சீட்டு ஆவணத்தை எழுதிக்கொடுத்துள்ளார் என்றும், கடந்த 2021ல் அவர் இறந்துள்ள நிலையில், மேற்படி பணத்தை பின்வட்டியுடன் திரும்ப வசூலிப்பதற்காக மனுதாரர் அசல்வழக்கை 1 முதல் 4 எதிர்மனுதாரர்களுக்கு எதிராக தாக்கல் செய்துள்ளார்.

தாவா கடனுறுதிச்சீட்டு ஆவணம் மோசடியானது என 1,2 எதிர்மனுதாரர்கள் தரப்பில் எதிர்வாதம் செய்யப்பட்டுள்ளது. தாவா கடனுறுதிச்சீட்டு ஆவணம் உண்மையான மறுபயனுக்காக ஏற்பட்டுள்ள ஆவணமா? அல்லது மோசடியான ஆவணமா? என்பது குறித்து இருதரப்பிலும் வழக்கில் முன்வைக்கப்படும் சாட்சி, சான்றாவணங்கள் மூலம் வழக்கின் இறுதிக்கட்டத்தில் மட்டுமே முடிவு செய்ய இயலும்.

மேற்படி இறந்துள்ள கோவிந்தராஜின் சட்டப்படியான வாரிசுகள் 1,2 எதிர்மனுதாரர்கள் என வழக்கில் குறிப்பிடப்பட்டுள்ளது. 1ம் எதிர்மனுதாரர் இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ள பி.சா.1 வாய்மொழி சாட்சியத்திற்கான

முதல் விசாரணை பிரமாணப்பத்திரத்திலும், இவ்வழக்கில் குறியீடு செய்துள்ள பி.சா.ஆ.4 இறந்துள்ள கோவிந்தராஜின் வாரிசு சான்றிதழ் நகல் ஆவணத்திலும், 6 முதல் 8 எதிர்மனுதாரர்களும், இறந்துள்ள கோவிந்தராஜின் சட்டப்படியான வாரிசுகள் என குறிப்பிடப்பட்டுள்ளது.

1,2 எதிர்மனுதாரர் தரப்பில், தாக்கல் செய்யப்பட்டுள்ள எதிருரையில், 5ம் எதிர்மனுதாரர் மேற்படி இறந்துள்ள கோவிந்தராஜின் சட்டப்படியான வாரிசு என்ற மனு சங்கதியை மறுத்து எதிர்வாதம் எதுவும் செய்யப்படவில்லை. இச்சூழ்நிலையில், இறந்துள்ள கோவிந்தராஜின் சட்டப்படியான வாரிசுகளான 5 முதல் 8 எதிர்மனுதாரர்கள் அசல் வழக்கு விசாரணைக்கு அவசியமான தரப்பினர்கள் என்ற மனுதாரர் தரப்பு கற்றறிந்த வழக்கறிஞரின் வாதம் சட்டப்படி ஏற்புடையதாகும்.

அசல்வழக்கில் மனுதாரர் தரப்பில் ஏற்கனவே, வாய்மொழி சாட்சியம் முடிக்கப்பட்டுள்ளது. வழக்கானது எதிர்மனுதாரர்கள் தரப்பு வாய்மொழி சாட்சியத்திற்காக நிலுவையில் உள்ள நிலையில், இம்மனு பரிகாரம் முன்வைக்கப்பட்டுள்ளது. 1,2 எதிர்மனுதாரர்களால் அசல் வழக்கில் தாக்கல் செய்யப்பட்டுள்ள எதிர்வழக்குரையில், இறந்துள்ள கோவிந்தராஜின் சட்டப்படியான வாரிசுகள் தொடர்பான முழுமையான விவரங்களை குறிப்பிடவில்லை.

இந்நிலையில், பி.சா.1 ஆக விசாரணை செய்யப்பட்டுள்ள 1ம் எதிர்மனுதாரர் தாக்கல் செய்துள்ள முதல் விசாரணை பிரமாணப்பத்திரத்தின் மூலமாக மட்டுமே இறந்துள்ள கோவிந்தராஜின் உண்மையான சட்டவாரிசுகள் தொடர்பான விவரங்களை மனுதாரர் கண்டறிந்து கொண்டுள்ளார். ஆகையால், மனுப்பரிகாரத்திற்கான இம்மனு காலம் கடந்து தாக்கல் செய்யப்பட்டிருந்தாலும், அது சட்டப்படியாக ஏற்றுக்கொள்ளக்கூடிய ஒன்று என இந்நீதிமன்றம் கருதுகிறது.

மனுவில் கூறப்பட்டுள்ள பரிகாரத்தினை மனுதாரருக்கு வழங்கி, உத்தரவிடுவதால், எதிர்மனுதாரர்களுக்கு எவ்வகையிலும் பாதிப்பு ஏற்பட வாய்ப்பில்லை. எனவே, மனுதாரருக்கு மனுப்பரிகாரம் வழங்குவது நீதியின் நலனுக்கு உகந்தது என முடிவு செய்யப்பட்டு, மனுதொடர்பான பிரச்சனைக்கு இந்நீதிமன்றத்தால் முடிவு காணப்படுகிறது.

06 ) **முடிவில்**, இம்மனு அனுமதிக்கப்பட்டு உத்தரவிடப்படுகிறது. செலவுத்தொகை இல்லை.

இவ்வுத்தரவு என்னால் சுருக்கெழுத்தருக்கு நேரிடையாக சொல்லப்பட்டு, அவரால் நேரடியாக கணிணியில் தட்டச்சு செய்யப்பட்டு, பின்னர் என்னால் பிழைநீக்கம் செய்யப்பட்டு, 2026ம்ஆண்டு, பிப்ரவரி மாதம் 16ம் நாள் திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

RAJA B
SUBORDINATE JUDGE, VANIYAMBADI
Digitally signed by RAJA B
Location: THIRUPATHUR
Date: 2026.02.16 13:01:04 +0530

சார்பு நீதிபதி,
வாணியம்பாடி.

**<u>மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரர்கள் தரப்பு சாட்சி மற்றும் சான்றாவணங்கள் :–</u>**

இல்லை

RAJA B
SUBORDINATE JUDGE, VANIYAMBADI
Digitally signed by RAJA B
Location: THIRUPATHUR
Date: 2026.02.16 13:01:09 +0530

சார்பு நீதிபதி,
வாணியம்பாடி.